**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 667** **நாள்: 11.11.2026**

**வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் தூய்மைப் பணிகளை வீடுவீடாகச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, குப்பைகளை எவ்வாறு தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பது குறித்து பொதுமக்களுக்கு விரிவாக விளக்கிக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகள் மற்றும் வீடுவீடாகச் சென்று தூய்மைப் பணியாளர்கள் குப்பைகளை சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருவதை வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.11.2026) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இராயபுரம் மண்டலம், வார்டு-53க்குட்பட்ட பேசின் பாலம் அருகில் உள்ள புகாரி டவர்ஸ், திருப்பள்ளி சாலை, வார்டு-54க்குட்பட்ட பழைய வண்ணாரப்பேட்டை இரயில்வே காலனி, வார்டு-54க்குட்பட்ட பி.கே.ஜி. தோட்டம், வார்டு-57க்குட்பட்ட கோவிந்தப்பா சாலை, வார்டு-58க்குட்பட்ட நாவல் மருத்துவமனை சாலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற தூய்மைப் பணிகளை பார்வையிட்ட வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், வீடுகளில் சேகரமாகும் குப்பைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை, மருத்துவக் கழிவுகள் என எவ்வாறு தரம் பிரிப்பது என்பது குறித்தும், தங்கள் வீட்டிற்கு குப்பைகளை சேகரிக்கை தூய்மைக்காவலர்கள் வரும்போது எந்தெந்த நிற குப்பைத் தொட்டிகளில் என்னென்ன குப்பைகளை போட வேண்டும் என்பது குறித்தும் வீடு வீடாகச் சென்று தெளிவாக, விரிவாக பொதுமக்களுக்கு விளக்கிக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், குடியிருப்புப் பகுதிகளில் இருந்து பெருமளவிலான குப்பைகள் சேகரமாவதால் அதனைத் தரம் பிரித்து வழங்கும்பட்சத்தில், குப்பைகளை முறையாக அப்புறப்படுத்த ஏதுவாக இருக்கும். எனவே, பொதுமக்கள் குப்பைகளை தரம்பிரித்து வழங்குவதில் முழு ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் என வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மண்டல அலுலவர் திரு.நா.சத்தியநாராயணன், செயற்பொறியாளர் திரு.முருகவேல் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**